# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

# மஞ்சக்குடி

பேரா.க. பார்த்தீபன்

தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு – யாப்பருங்கலக்காரிகை, வல்லினம் மிகும் இடங்கள்.**

பாடத் தயாரிப்பு

பேரா.க. பார்த்தீபன்

# 7. யாப்பருங்கலக் காரிகை

*யாப்பின் இலக்கணத்தினை எளிமையாக எடுத்துக்கூறும் நூல் யாப்பருங்கலக் காரிகையாகும். யாப்பு + அருங்கலம் + காரிகை என்ற மூன்றுச் சொற்களாகப் பிரித்துப் பொருள் கூறுபவரும் உண்டு. 'யாப்பு' என்பது செய்யுள் என்று பொருள் தரும். 'அருங்கலம்' என்பது அணிகலன் என்று பொருள் தருக. 'காரிகை' என்பது பெண் என்றும் பொருள் கொண்டு யாப்பு என்னும் பெண்ணுக்கு அணிகலன்களாகச் சூட்டப்பட்ட நூல் என்றும், தமிழ் என்னும் பெண்ணுக்குச் சூட்டப் பட்ட யாப்பு என்னும் அணிகலன் என்றும் பெயர் கூறுவர். இந்த நூலை யாப்பருங்காலத்தின் சேய் என்றம், யாப்பருங்கலத்திற்குப் புறனடை என்றும் கூறுவர்.*

## நூல் மரபுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *யாப்பருங்கலக் காரிகை* |
| *நூலாசிரியர்* | : | *அமிர்தசாகரனார்* |
| *காலம்* | : | *கி.பி 10 ஆம் நூற்றாண்டு* |
| *சமயம்* | : | *சமணம்* |
| *பா* | : | *கட்டளைக் கலித்துறை* |
| *நூல்பிரிவு* | : | *உறுப்பியல் = 20 காரிகைகள்*<br>*செய்யுளியல் = 19 காரிகைகள்*<br>*ஒழிபியல் = 9 காரிகைகள்*<br>*காரிகைகள் = 44 + 3 + 12 = 59* |
| *சிறப்பு* | : | *மகடூஉ முன்னிலையாகப் பாடப்பட்ட நூல்*<br>*"காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று"*<br>*'காரிகை' என்ற சொல்லுக்குக் கட்டளைக் கலித்துறை என்ற பொருளும் உண்டு. கட்டலைக் கலித்துறை யாப்பில் பாடப் பட்டதால் இந்நூலை 'காரிகை' என்றும் அழைப்பர்.* |

| | | |
|---|---|---|
| உரைகள் | : | 1. |
| | | 2. |
| | | 3. |
| பதிப்பு | : | 1851 குணசாகரர் உரையுடன் களத்தூர் வேதகிரி முதலியார் பதிப்பித்துள்ளார். |
| | | 1864 - நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரை ஐந்திலக்கண மூலப் பதிப்பில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. |
| | | சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகைக்குப் புத்துரை எழுதி வெளியிடலாம். |
| | | 1899 - இல் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக், கழகம், உ.வே.ச. நூல் நிலையம், அண்ணாமலைப் பல்கைலக் கழகம், போன்றவையும்பதிப்பித்துவெளியிட்டுள்ளது. |

## நூல் பெயர்க்காரணம்

யாப்பருங்கலக் காரிகையின் உரையாசிரியர் குணசாகரர், வடமொழியில் சூத்திரங்களாக உள்ள நூலுக்கு ‘சுலோக ரூபமாக விளக்கம் கூறும் நூலை ‘காரிகை’ என்று அழைப்பர். அந்த வடமொழி மரபைப் பின்பற்றி இந்நூலுக்கும் ‘யாப்பருங்கலக் காரிகை’ என்று பெயரிட்டிருக்கலாம். மேலும் குணசாகரர் ‘யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்கரமாய் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங் கலக் காரிகை என்னும் பெயர்த்து’ என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் காரிகை என்ற சொல்லுக்குக் கட்டளைக் கலித்துறை என்ற பொருளும் உண்டு என்பர். அதன் காரணமாக இந்த நூலுக்கு யாப்பருங்க கலக் காரிகை என்று பெயர் வந்திருக்கலாம் இருப்பினும் இந்நூலை பெரும்பாலனோர் “காரிகை” என்றே அழைப்பர்.

“ஒரு சில உரையாசிரியர்கள் இந்நூலாசிரியர் சமண சமயத்தின் உட்பிரிவான ‘அருங்கலான்வயம்’ என்னும் பிரிவைச் சார்ந்தவராக இருப்பதால் இவர் யாப்பருங்கலக் காரிகை என்று பெயரிட்டிருக்கலாம்’ என்பர். இந்நூலின் சிறப்புக் கருதி

**“காரிகை கற்றுக் கவி பாடுவதிலும்**
**பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே”**

என்ற பழமொழியின் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம் காரிகை என்பது கவியின் இலக்கணத்தைச் சொல்லும் நூல் யாப்பு என்பதும் கவியைக் குறிக்கும் சொல் என்பர்.

### நூலாசிரியர்

யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் அமிர்த சாகரர் என்பவராவர் யாப்பருங்கலத்தின் ஆசிரியரும் இவரே ஆவார்.

### காலம்

அமிர்தசாகரரின் காலம் கி.பி.10 - ஆம் நூற்றாண்டு ஆகும். (காலம் தொடர்பான பிற கருத்தியலை யாப்பருங்கலம் நூல் வழியாக அறிந்து கொள்க)

### நூல் அமைப்பு

யாப்பருங்கலக் காரிகை, சிறப்புப் பாயிரம், ஒன்று, அவையடக்கப் பாடல் இரண்டும் தவிர்த்து மூன்று பிரிவுகளை உடையதாகும். அவை

1. உறுப்பியல்
2. செய்யுளியல்
3. ஒழிபியல்

| வ.எண் | இயல் / பிரிவு | காரிகைகள் |
|---|---|---|
| 1. | உறுப்பியல் | 20 காரிகைகள் |
| 2. | செய்யுளியல் | 15 காரிகைகள் |
| 3. | ஒழிபியல் | 9 காரிகைகள் |
| | மொத்தம் | 44 காரிகைகள் |

மேலும் சில ஏட்டுச் சுவடிகளில்

**“இருபது பதினைந் தொன்பது காரிகை**
**உறுப்பியல் செய்யுள் ஒழிபிய லோத்தே”**

என்று கூறுவதும் குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இந்நூலின் உரையாசிரியர் குணசாகரர் இந்நூல் எவ்வளவைத்தோ எனின் “காரிகை வகையால் நாற்பத்தி நான்கு” என்றும் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் காரிகைகளில் நேரசை முதலாக உடைய காரிகை 21 ஆகும். நிரையசை முதலாக உடைய காரிகை 23 ஆகும். இவற்றோடு இயல் சூத்திர முதல் நினைப்பு காரிகை 3, உரைசூத்திரக் காரிகைகள் 12 ஆக 59 காரிகைகள் இடம் பெறுகின்றன.

இந்நூல் மகடூஉ முன்னிலையாகப் பாடப்பட்டுள்ளது. தாழ்குழலே, ஐய நுண் இடையாய் கரிமென்குழல் காரிகையே! அன்ன பூங்கொடியே,

நறுமென் குழல் தேமொழியே! பணிமொழியே! என்று பெண்ணை முன்னிலையாக வைத்து காரிகைகள் பாடப்பட்டுள்ளது.

## நூல் சிறப்பு

யாப்பின் இலக்கணத்தைத் தெளிவற கற்றுத் தேர்பவர்களுக்கு இந்நூல் பெரிதும் துணை செய்யும். அடிகளின் இலக்கணத்தை

**"குறள் இருசீர் சிந்துமுச்சீர் அடி நால்ஒருசீர்**
**அறைதகு காலை அளவொரு நேரடி ஐ ஒருசீர்**
**நிறைதரு பாதம் நெடிலடியாம். நெடுமென் பணைத்தோர்**
**கறைகெழு வேல்கண் நல்லாய்! மிக்க பாதம் கழிநெடிலே"**

என்று எளிமையாகக் கூறுகிறது. மேலும் எழுத்து இயலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தொடைவிகற்பம் பற்றி எடுத்துக் கூறுகிறது.

நான்குவகைப் பாக்கள் செய்யுளியலில் பாக்களின் அடிவரையும், ஓசையும், மருட்பாவின், இலக்கணத்தையும் எடுத்துகூறுகிறது. மருட்பாவின் இலக்கணத்தை

"வெண்பா முதல்வந்து அகவல் பின்னாக விளையும் என்றால் வண்பால் மொழி மடவாய் மருட்பா, என்னும் வையகமே" என்று கூறுகிறது.

ஒழிபியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைக்குப் புறனடையும், கூன், பொருளின் தொகுப்பினையும் எடுத்துக் கூறுகிறது.

**"எழுத்துப் பதின்மூன்று இரண்டு அசை சீர் முப்பது ஏழ்தனை ஐந்து**
**இழுக்கில் அடி தொடை நாற்பத்து மூன்று ஐந்து இனம் மூன்று**
**ஒழுக்கிய வண்ணாங்கள் நூறு ஒன்பது ஒண்பொருள் கோள்இரு மூ**
**வழக்கு இல் விகாரம் வனப்பு எட்டு யாப்புள் வகுத்தனவே"**

என்று கூறுகிறது.

## உரையாசிரியர்

யாப்பருங்கல உரையாசிரியரான குணசாகரரே யாப்பருங்கல காரிகையின் உரையாசிரியர். இவரின் காலம் கி.பி பத்தாம் நூற்றாண்டு என்பர். இந்நூலின் உரையாசிரியர் அமிர்த சாகரரின் ஞான ஆசிரியர் குணசாகரர் அல்லர், இந்நூல் ஆசிரியரின் மேல் மிகுந்த அன்பும், தமிழ்ப் புலமையும் மிக்க, தவமுனிவன் பிற்காலத்தே தோன்றிய குணசாகரர் என்பதே உண்மையாகும். இந்த நூலின் சிறப்பினை நன்கு உணர்ந்த படிக்காசுப் புலவர்.

"காடும் செடியும் என்னோ! தமிழ்க் காரிகை கற்கின்றதே" என்று தனிப்பாடலில் கூறுவதில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

## ஆ. 1. வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களின் பின் வலி மிகும்.

அ + பக்கம் = அப்பக்கம்

இ + பக்கம் = இப்பக்கம்

உ + பக்கம் = உப்பக்கம்

'உ' என்ற சுட்டெழுத்து தற்போது வழக்கில் இல்லை.

2. எ என்ற வினா எழுத்தின் பின் வலி மிகும்.

எ + பக்கம் = எப்பக்கம்

3. அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு என்ற சொற்களுக்குப் பின் வலி மிகும்.

அந்த + பையன் = அந்தப் பையன்

இந்த + பையன் = இந்தப் பையன்

எந்த + பையன் = எந்தப் பையன்

அங்கு + போனான் = அங்குப் போனான்

எங்கு + போனான் = எங்குப் போனான்

ஈங்கு + சென்றான் = ஈங்குச் சென்றான்

இங்கு + சென்றான் = இங்குச் சென்றான்

4. அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை என்ற சொற்களுக்குப் பின் வலி மிகும்.

அவ்வகை + செயல் = அவ்வகைச் செயல்

அத்துணை + பேர் = அத்துணைப் பேர்

இத்துணை + பேர் = இத்துணைப் பேர்

5. இனி, தனி, அன்றி, இன்றி, மற்ற, மற்றை, நடு, பொது, அணு, முழு, புது, திரு என்ற சொற்களுக்குப் பின் வலி மிகும்.

இனி + காண்போம் = தனிச் சொல்

தனி + சொ = தனிச் சொல்

அணு + குண்டு = அணுக்குண்டு

புது + சட்டை = புதுச்சட்டை

திரு + குறள் = திருக்குறள்

6. எண்ணுப் பெயர்களில் அரை, பாதி, எட்டு, பத்து சொற்களின் பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| அரை + பங்கு | = | அரைப்பங்கு |
| பாதி + பங்கு | = | பாதிப்பங்கு |
| எட்டு + தொகை | = | எட்டுத்தொகை |
| பத்து + பாட்டு | = | பத்துப்பாட்டு |

7. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வலி மிகும்

| | | |
|---|---|---|
| பூ + பறித்தாள் | = | பூப்பறித்தாள் |
| தீ + பிடித்தது | = | தீப்பிடித்தது |
| கை + குழந்தை | = | கைக்குழந்தை |
| பூ + பந்தல் | = | பூப்பந்தல் |

8. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| அறியா + பிள்ளை | = | அறியாப்பிள்ளை |
| செல்லா + காசு | = | செல்லாக்காசு |
| தீரா + துன்பம் | = | தீராத்துன்பம் |

9. வன் தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| எட்டு + கட்டுக்கள் | = | எட்டுக்கட்டுக்கள் |
| கொக்கு + பறந்தது | = | கொக்குப் பறந்தது, |
| விட்டுச் + சென்றாள் | = | விட்டுச் சென்றாள் |

10. திரு, நடு, முழு, பொது, அணு போன்ற முற்றியலுகரச் சொற்களின் பின் வலி மிகும்

| | | |
|---|---|---|
| பொது + தேர்வு | = | பொதுத்தேர்வு |
| திரு + குறள் | = | திருக்குறள் |
| நடு + தெரு | = | நடுத்தெரு |
| அணு + திரள் | = | அணுத்திரள் |

11. பண்புத் தொகையின் பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| பொய் + புகழ் | = | பொய்ப் புகழ் |
| வெள்ளை + தாள் | = | வெள்ளைத் தாள் |
| மெய் + பொருள் | = | மெய்ப்பொருள் |

12. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| தை + திங்கள் | = | தைத்திங்கள் |
| மல்லிகை + பூ | = | மல்லிகைப்பூ |

13. உவமைத் தொகையில் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| தாமரை + கண் | = | தாமரைக் கண் |
| முத்து + பல் | = | முத்துப்பல் |

14. இரண்டாம் வேற்றுமை உருபின் பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| நூலை + படி | = | நூலைப்படி |
| காலை + பிடி | = | காலைப்பிடி |

15. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகும்.

குடி + பிறந்தார் = குடிப் பிறந்தார்

காட்டிடை + சென்றாள் = காட்டிடைச் சென்றாள்

16. நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வலி வரும்.

வேலி + கால் = வேலிக்கால்

17. ஆறாம் வேற்றுமைத் தொகையில் முதலில் நிற்கும் நிலைமொழி அஃறிணையாய் இருப்பின் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| கிளி + கூடு | = | கிளிக் கூடு |
| நாய் + குட்டி | = | நாய்க்குட்டி |

18. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையில் வரும் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| காய்கறி + கடை | = | காய்கறிக்கடை |
| சிற்றுண்டி + சாலை | = | சிற்றுண்டிச் சாலை |

19. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வரும் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| மோர் + குழம்பு | = | மோர்க் குழம்பு |
| பித்தளை + குடம் | = | பித்தளைக் குடம் |

20. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வரும் வலி மிகும்.

குழந்தை + பால் = குழந்தைப் பால்

கோழி + தீனி = கோழித் தீனீ

21. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வரும் வலி மிகும்.

வாய் + பாட்டு = வாய்ப்பாட்டு

விழி + புனல் = விழிப்புனல்

22. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வரும் வலி மிகும்.

சென்னை + கல்லூரி = சென்னைக் கல்லூரி

தண்ணீர் + பாம்பு = தண்ணீர்ப் பாம்பு

23. தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகாரத்தின் பின் வரும் வலி மிகும்.

சுறா + தலை = சுறாத்தலை

கனா + கண்டான் = கனாக் கண்டான்

24. அன்றி, இன்றி என்னும் இகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சங்களுக்குப் பின்வரும் வலி மிகும்.

இன்றி + கொடேன் = இன்றிக்கொடேன்

அன்றி + செல்லேன் = அன்றிச்செல்லேன்